**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.53** **நாள் : 20.04.2018**

## சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.30.35 கோடி மதிப்பீட்டில் தியாகராய நகரில் ஆகாய நடைபாதை (Skywalk) அமைக்கும் பணி நடைபெற உள்ளது.

சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.30.35 கோடி மதிப்பீட்டில் தியாகராய நகரில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய ஆகாய நடைபாதை (Skywalk) (மாம்பலம் இரயில் நிலையம் முதல் தியாகராய நகர் பேருந்து நிலையம் வரை) அமைக்கும் பணி விரைவில் நடைபெற உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் பல்வேறு போக்குவரத்து வசதிகளை ஒருங்கிணைக்கும் பணிகளின் ஒரு பகுதியாக, ஆகாய நடைபாதை மூலம் மாம்பலம் இரயில் நிலையத்தை, தியாகராய நகர் பேருந்து நிலையம் வரை இணைக்க முடிவு செய்யப்பட்டது. இத்திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் இரண்டாவது முழுமை திட்டப் பணிகளில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் சீர்மிகு நகரம் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த ஆகாய நடைபாதை, மாம்பலம் இரயில் நிலையத்தில் கூடுதலாக கட்டப்பட்டு வரும் இரயில்வே நடைமேம்பாலத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, இரயில்வே பார்டர் சாலை மற்றும் மேட்லி சாலை வழியாக தியாகராயநகர் பேருந்து நிலையம் வரை 0.60 கி.மீ நிளத்தில், 4.00 மீ அகலத்தில் அமைக்கப்பட உள்ளது.

தியாகராய நகர் பேருந்து நிலையம், தியாகராய நகர் பேருந்து நிலையத்தின் எதிர்புறம் மற்றும் மாம்பலம் இரயில் நிலையம் ஆகிய இடங்களின் வழியாக இந்த ஆகாய நடைபாதையை அடையலாம்.

மாம்பலம் இரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டு வரும் இரயில்வே நடைமேம்பாலத்துடன் பெருநகர சென்னை மாநகராட்சியின் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய ஆகாய நடைபாதையை இணைப்பதற்கு இரயில்வே துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. கலந்தறிதற்குரியவரால் (Consultant) ஆகாய நடைபாதையின் வடிவமைப்பு பணிகள் இறுதி செய்யப்பட்டு, வரைவு இறுதி திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தம் கோரும் பணி தொடங்கப்படவுள்ளது. ஒப்பந்தப்பணி முடிந்தவுடன் விரைவில் பணிகள் தொடங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**